1986 நவம்பர் 21]

திரு. அ. ரகுமான்கான் : நாங்கள் ஏதோ தப்பான காரியம் செய்கிறோம் என்பது போலவும், பதவியிலிருந்து நீக்குவதற்கு ஏதோ ஷரத்து இருப்பது போலவும், எனவே நடவடிக்கை எடுப்பீர்களா என்று கேட்பது சபைக் குறிப்பில் இருக்கிறது.......

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் எங்கேயோ போக வேண்டாம். அவர் ஒரு சந்தேகத்தை கேட்டார். அதை இந்த அவை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. வழக்கு மன்றத்தில் வழக்கு இருக்கிறது. அவர்கள் என்ன வாதாடுகிறார்கள் என்பதைப் பொறுத்தும், நீதிபதி என்ன தீர்ப்பு அளிக்கிறார் என்பதைப் பொறுத்தும், அதற்குப் பிறகுதான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சட்டப் பிரச்சினை பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர அதுவரையில் எதுவுமே இல்லை என்று சொன்னதற்குப் பிறகு பிரச்சினை அடங்கி விட்டது. மறுபடியும் அதைக் கிளப்ப வேண்டிய அவசியம் இல்லை.

4. அமைச்சரின் அறிக்கை.

விதி 111-ன் கீழ்

ஆதிதிராவிட, பிற்பட்டோர் நலத்துறை விடுதி மாணவர்களுக்கான உதவித் தொகை அதிகரிப்பு பற்றிய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 111-ன் கீழ் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு அறிக்கை ஒன்றை அளிப்பார்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 111-ன் கீழ் கீழ்க்கண்ட அறிக்கையை அவைக்கு அளிக்கிறேன்,

ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் 765 விடுதிகளும், பிற்பட்டோர் நலத்துறையின் கீழ் 556 விடுதிகளும் இயங்கி வருகின்றன. அதில் மொத்தம் முறையே 10 ஆயிரம் மாணவர்கள், கல்லூரி மற்றும் தொழிற் பயிற்சிக் கூட விடுதிகளிலும், 87-ஆயிரம் மாணவர்கள் பள்ளி விடுதிகளிலும் தங்கி வருகிறார்கள். தற்போது சென்னை நகரத்திலுள்ள கல்லூரி மற்றும் தொழிற் பயிற்சிக் கூட விடுதிகளிலுள்ள மாணவர்களுக்கு, ரூபாய் 95-ம் புறநகர்ப் பகுதியிலுள்ள கல்லூரி மற்றும் தொழிற் பயிற்சிக் கூட விடுதியிலுள்ள மாணவர்களுக்கு ரூபாய் 80-ம், மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிக்கூட விடுதிகளிலே உள்ள

மாணவர்களுக்கு ரூ. 60-ம், மாதம், உணவுச் செலவுக்காக மாதம் தோறும் வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகைகள் கடைசியாக 1981-ல் நிர்ணயிக்கப்பட்டவை. இதற்கிடையே விலைவாசிகளுடைய உயர்வைக் கருத்தில் கொண்டு, மாணவர்களுக்கு நல்ல சத்துள்ள உணவு வழங்க வேண்டும் என்ற எண்ணத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1–12–1986 முதல் கீழ்க்கண்டவாறு மாதம் உணவுத் தொகைகளை உயர்த்தலாம் என்று ஆணையிட்டுள்ளார்கள்.

(அ) கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சிக்கூட விடுதிகள்: சென்னை நகரில் மட்டும், இப்பொது வழங்கப்படும் தொகை ரூ. 95 (நபர் ஒன்றுக்கு), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கலாம் என்று ஆணையிட்டிருக்கிற தொகை மாதம் ரூபாய் 140. கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சிக் கூட விடுதிகளில் மற்றப் பகுதிகளில் இப்போது வழங்கப்படுகின்ற தொகை ரூபாய் 80. இனிமேல் முதலமைச்சர் ஆணையிட்டு இருக்கும் தொகை ரூபாய் 135.

மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிக்கூட விடுதிகளில் பழங்குடியினர் விடுதிகள், பழங்குடியினர் உறைவிடம், மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் பழங்குடியினர் உறைவிட உயர்நிலைப் பள்ளிகளில்இப்போது வழங்கப்படுகின்ற தொகை மாதம் ரூபாய் 60; முதலமைச்சர் உயர்த்தி இருக்கின்ற தொகை ரூபாய் 85 ஆகும். இதனால் மொத்தம் 97 ஆயிரம் மாணவர்கள் பயன் அடைவர், இதனால் ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் ரூபாய் 1.73 கோடியும், பிற்பட்டோர் நலத்துறையின்கீழ் ரூபாய் 91 இலட்சமும் அரசுக்குத் கூடுதல் செலவாகும். இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையாக இட்டிருக்கிறார்கள் என்பதைப் பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

5. கவன ஈர்ப்புக்ள்.

(அ) ஓமலூர் டாசல் செராமிக் தொழிற்சாலை மீண்டும் திறக்கப்பட வேண்டியது குறித்து.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சேலம் மாவட்டம், ஓமலூர் டாசல் செராமிக் சென்டரில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு லே-ஆஃப் ஊதியமும் நிறுத்தப்பட்டுவிட்ட நிலையில் அவர்கள் படும் அல்லல் குறித்தும், மீண்டும் அத்தொழிற்சாலை திறக்கப்படவேண்டிய அவசியம் குறித்தும் உள்ள'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.